# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 060 /2016

ஆணை எண் 111 /2016

நாள் 15 /06 /2016

திரு.செ சந்திரசேகர்,
2/40 A, சேரன் நகர்,
சின்ன தொட்டி பாளையம், பெள்ளாதி கிராமம்,
காரமடை, மேட்டுப்பாளையம் தாலுகா,
கோயம்புத்தூர் மாவட்டம் — மனுதாரர்

செயல் அலுவலர்,
தேர்வு நிலை பேரூராட்சி,
ஆத்துார் – 628151. — எதிர் மனுதாரர்

திரு செ.சந்திரசேகர், 2/40 A, சேரன் நகர், சின்ன தொட்டி பாளையம், பெள்ளாதி கிராமம், காரமடை, மேட்டுப்பாளையம் தாலுகா,கோயம்புத்துார் மாவட்டம் என்பவரது 30.01.2016 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014–ன் படியான முறையீடு 01.02.2016 அன்று முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்.060/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீடு தொடர்பாக உரிய ஆவணங்கள், விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு இம் முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

## ஆணை

கோவை மாநகர காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரியும் திரு.செ.சந்திரசேகர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற அவசரச் சட்டம் 2014 ன் படி புகார் மனு எனக் குறிப்பிட்டு தனது 30.01.2016 நாளிட்ட மனு ஒன்றினை இம்முறை மன்ற நடுவத்திற்கு அளித்துள்ளார். மனுதாரரது 30.01.2016 நாளிட்ட மனுவில் தனது மூத்த மகனுக்கு பெயரில்லாத பிறப்பு சான்றும் இளைய மகனுக்கு அம்பிரித் குமார் என்ற தவறான பெயரிலும் தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூர் பேரூராட்சியால் வழங்கப்பட்டது என்றும் மேற்படி எனது மகன்களுக்கு பெயருடன் பிறப்பு சான்றிதழ் பெறவும், பெயர் திருத்தம் செய்து பிறப்பு சான்று பெறவும் மனுவுடன் 29.05.2015–ம் தேதி ஆத்தூர் பேரூராட்சி அலுவலகத்தை அணுகினேன் என்றும் அப்போது அங்கு பின்னர் பெயர் கேட்டுத் தெரிந்து கொண்ட பேரூராட்சி அலுவலர்கள் திரு.சுப்பிரமணி மற்றும் திரு.சுடலைமுத்து ஆகியோர் இருந்தார்கள். அவர்களிடம் எனது மனுவை கொடுத்த போது அதை வாங்காமல் செயல் அலுவலரிடம் நேரில் கொடுங்கள் என்று கூறினார்கள். அவர் தற்போது கோவையில் பயிற்சியில் உள்ளார் என்றார்கள். தனது மனுவை அவர்கள் பெற்றுக் கொள்ளாததால் ஏமாற்றத்துடன் கோவை வந்ததாகவும் தான் 20.06.2015 அன்று தனது மூத்த மகனின் பெயரில்லா பிறப்பு சான்று நகல் மற்றும் இளைய மகனின் சரியற்ற பெயரில் இருந்த பிறப்பு சான்று நகல், தனது மகன்களின் பெயர் / சரியான பெயர் கொண்ட சாதிச் சான்றிதழ்களின் நகல்கள் மதிப்பெண் சான்றிதழ்களின் நகல்கள், பள்ளி மாற்று சான்றிதழ்களின் நகல்கள் மற்றும் பொது விநியோக அட்டை நகல் ஆகியவற்றுடன் தனது மகன்களின் பெயர் பதிவு மற்றும் திருத்தம் செய்யக் கோரி விண்ணப்பம் ஒன்றை ஆத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு பதிவு தபாலில் அனுப்பியதாக தெரிவித்துள்ளார். அவரது விண்ணப்பத்திற்கு எந்த பதிலும் வராததால் 27.07.2015 –ந்தேதி அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு தனது விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் படி மனு ஒன்றை அனுப்பியதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் 31.07.2015–ம் தேதி அன்று மேற்படி பேரூராட்சி அலுவலகத்தை நேரில் அணுகி அங்கு அலுவலில் இருந்த பேரூராட்சி அலுவலர் சுப்பிரமணி என்பவரிடம் தனது விண்ணப்பம் பற்றி விசாரித்த போது அவர் தன்னிடம் “நீங்கள் அனுப்பிய விண்ணப்பம் இங்கு தான் உள்ளது. நீங்கள் செயல் அலுவலரை பார்க்க வேண்டும். செயல் அலுவலர் வீட்டிற்கு போயிருக்கார் . 1998 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு ரிஜிஸ்டர் இங்கு தான் உள்ளது. உங்க பெரிய மகனுக்கு பிரச்சினை இல்லை. ரிஜிஸ்டரை காயல்பட்டினம் சப்ரிஜிஸ்டர் ஆபிசுக்கு அனுப்பிடுவோம். அதற்குள் செயல் அலுவலரை போய் பாருங்கள். இரண்டு பேருக்கும் சர்ட்டிபிகேட் வழங்கிவிடுகிறோம் என்றார். நான் செயல் அலுவலரை பார்ப்பதற்காக காத்திருந்தேன். அப்போது என்னிடம் வந்து தனியாக பேசிய சுப்பிரமணி செயல் அலுவலர் ரூ.3000/– வாங்க சொன்னார். ரூ,3000/– கொடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்” என்றார். அதிர்ச்சி அடைந்த நான் பிறகு வந்து பார்த்துக் கொள்கிறேன் என்று அங்கிருந்து வந்து விட்டேன். எப்படியும் என் மகன்களுக்கு சர்ட்டிபிகேட் கொடுத்துத்தானே ஆக வேண்டும். என்ன செய்கிறார்கள் பார்ப்போம் என்று காத்திருந்தேன். அவர்களிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. இந்த நிலையில் எனது 20.06.2015 தேதியிட்ட விண்ணப்பத்தில் ஆள் அறியும் சான்று இல்லை எனவும் அதை வட்டாட்சியரிடம் பெற்று தகுந்த ஆதார ஆவணங்களுடன் நேரில் விண்ணப்பிக்குமாறும் 27.07.2015 தேதியிட்ட ஆத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்துடன் எனது விண்ணப்பம் எனது மகன்களின் பெயர் பதிவு மற்றும் திருத்தம் செய்ய மறுத்து 11.08.2015 –ம் தேதி பதிவு தபால் மூலம் திருப்பி அனுப்பப்பட்டது என்றும் எனது ஆர்.டி.ஐ. மனுவுக்கும் எனது மனு 27.07.2015 ம் தேதியிட்ட கடிதம் மூலம் திருப்பி அனுப்பப்பட்டதாக தகவல் தரப்பட்டது. எனவே, அதன் பிறகும் 27.08.2015–ம் தேதி மேற்படி ஆத்தூர் பேரூராட்சி அலுவலகத்தை தொடர்பு கொண்டு எனது விண்ணப்பம் குறித்து விசாரித்த போது செயல் அலுவலர் விடுமுறையில் உள்ளதாகவும் அவரிடம் பேசிக் கொள்ளுமாறும் தெரிவித்தார்கள். மேற்படி எனது விண்ணப்பம் நான் லஞ்சம் கொடுக்காத ஒரே

காரணத்திற்காகவும் என்னிடமிருந்து லஞ்சப்பணம் பெறமுடியாததாலும் ஆத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் ஊழியர் சுப்பிரமணி ஆகியோரால் சட்டத்திற்கு புறம்பாக ஆளறியும் சான்று இல்லை என்றும் உரிய வட்டாட்சியரிடமிருந்து ஆளறியும் சான்று பெற்று தகுந்த ஆதார ஆவணங்களுடன் நேரில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

தனது பெயர் பதிவு மற்றும் திருத்தத்திற்கு முறையான தேவையான அனைத்து ஆவணங்களும் அனுப்பியும் ஆத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் ஊழியர் சுப்பிரமணி ஆகியோருக்கு அவர்கள் கேட்ட தொகையை லஞ்சமாக கொடுக்காததாலும் அவர்களின் தாமதப்படுத்திய நிர்பந்தத்திற்கு அடிபணியாததாலும் சட்டப்படியான அனைத்து தகுதிகளும் தனது விண்ணப்பத்திற்கு இருந்தும் தனது விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் வேண்டுமென்றே திருப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி காரணங்களுக்காக ஆத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் ஊழியர் சுப்பிரமணி ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக கோவை மாவட்டம் ஆத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டது. 08.03.2016 நாளிட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தெரிவிக்கும் புகார் உண்மைக்கு புறம்பானவை மெய்தன்மை அற்றவை.

பிறப்பு பதிவேட்டில் குழந்தையின் பெயர் பதிவு செய்ய தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விதிகள் 2000 பிரிவு 14ன் படியும் இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை சென்னை, அவர்களின் கடிதம் எண்.8345/VS/A/2000 நாள்.12.12.2000 மற்றும் கடிதம் எண்.145802/SBHI-I/SI/2008 நாள்.17.06.2008ன் படி பேரூராட்சியில் உரிய உறுதிமொழி படிவம் இணைத்து மனு செய்ய வேண்டும் உறுதிமொழி அளிப்பவர் இன்னாரென்று நிரூபிக்க அவரது ஆள் அறியும் சான்றிதழ் மற்றும் உறுதிமொழி அளிப்பவர் சான்று வழக்கறிஞர் (நோட்டரி பப்ளிக்) முன்னிலையில் தனது கையொப்பமிட்டு உரிய ஆவணங்களின் நகலுடன் சம்மந்தப்பட்ட நபர்

விண்ணப்பிக்க வேண்டும். மனுதாரர் அவ்வாறு விண்ணப்பிக்காமல் ஒரு கடிதம் மூலம் விண்ணப்பம் செய்து உள்ளார். பெயர் பதிவுக்கு உறுதிமொழி படிவம் முக்கியமானது ஆகும்.

மேலும், பிறப்பு பதிவேட்டில் ஒருமுறை பதிவு செய்த குழந்தையின் பெயரை மீண்டும் பெயர் திருத்தம் செய்ய மாற்றம் செய்ய இயலாது. பெயர் திருத்தம் குறித்து அரசிதழில் விளம்பரப் படுத்த வேண்டும். இவ்விவரம் மனுதாரருக்கு தகவல் அறியும் சட்டப்படி மனு 05.01.2016ம் தேதி வரை மூன்று கடிதங்கள் வாயிலாக உரிய இணைப்புகளுடன் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சியில் சம்மந்தப்பட்ட பதிவேடு இருந்தாலும் முறையான உறுதிமொழி படிவம் இன்றி பெயர் பதிவு செய்ய இயலாது என்பது மனுதாரர் ஏற்க மறுக்கிறார்.மேலும் 1998,2000 ஆண்டில் பிறந்த குழந்தைக்கு 17 ஆண்டுகளாக பெயர் பதிவு செய்யாமல் இருந்துள்ளார். படித்து மிகவும் பொறுப்பான பதவியில் பணிபுரியும் மனுதாரர் இவ்வளவு நாளாக பெயர் பதிவு செய்யாமல் இருந்ததுடன் தற்பொழுதாவது முறையாக விண்ணப்பிக்காமல் வேண்டுமென்றே பிறப்பு இறப்பு பதிவாளர் மீது உண்மைக்கு புறம்பான குற்றச்சாற்றுகளை குறிப்பிட்டு வருகிறார்.

மனுதாரர் தனது இரண்டாவது மகன் 06.10.2000தில் பிறந்ததாகவும் அம்பிரித் குமார் என பிறப்பு பதிவு செய்து 10.11.2000தில் பிறப்பு சான்று பெற்றுள்ளார். (மேற்படி பிறப்பு சான்று வழங்கிய பதிவாளர் தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளார்) மனுதாரர் பொறுப்புள்ள பதவியில் இருந்து கொண்டு 20.06.2015 வரை இந்த பிறப்பு சான்று குழந்தை பெயர் குறித்து 15 ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் தற்பொழுது குழந்தையின் பெயர் மாறியுள்ளது என கூறுவதும் அப்பெயரை மாற்றம் செய்ய வேண்டுமென தவறான வழிகளில் பிறப்பு பதிவு செய்யும் பதிவாளர் பணிக்கு இன்னல் ஏற்படுத்தி வருகிறார்.

மனுதாரர் தமிழ் நாட்டு அரசின் மிகப் பொறுப்பான துறையான காவல் துறையில் காவல் ஆய்வாளராக உயர்வான பதவியில் பணி செய்துக் கொண்டுள்ள மரியாதைக்குரிய நபர்

பேரூராட்சி பணியாளர்கள் பிறப்பு சான்று பெற லஞ்சம் கேட்டதாக கூசாமல் உண்மைக்கு புறம்பான தகவலை கூறுவது மிகவும் அதிர்ச்சியாகவும் அரசு பணிக்கு வேதனையாகவும் உள்ளது.

பிறப்பு இறப்பு பதிவு செய்ய பேரூராட்சி பகுதியில் வேறுபணிக்கோ கையூட்டு (லஞ்சம்) ஏதும் செயல் அலுவலரோ மற்ற பணியாளரோ நாளது வரை பெற்றதில்லை. மனுதாரர் கூறும் ஆத்தூர் பேரூராட்சியில் 20.06.2015 முதல் 11.08.2015 வரை காலத்தில் பிறப்பு சான்று குழந்தையின் பெயர் பதிவு செய்து சான்று பெற்ற மனுதாரர்கள் 10 பேர்கள் பெயர் பதிவு சான்று வழங்கப்பட்ட நபர்களை நேரில் விசாரித்தால் உண்மை புலனாகும். சம்மந்தப்பட்ட மனுதாரர் முறையாக விண்ணப்பிக்காமல் தான் காவல் ஆய்வாளர் என்ற நிலையில் பணி செய்து வருபவர். பொய்யாக புகார் மனுவில் கையூட்டு பெற்று பணிபுரிகிறார் என அரசு அலுவலரை உண்மைக்கு புறம்பானமுறையில் குற்றச்சாட்டு சுமத்தி உள்ளார்.

எனவே மனுதாரர் முறையாக தனது குழந்தையின் பெயரை பதிவு செய்ய உறுதிமொழி படிவம் பூர்த்தி செய்து சான்று வழக்கறிஞர் முன்பு கையொப்பம் இட்டு ஒப்புதல் வழங்கும் பொழுது மனுவினை பரிசீலனை செய்து பிறப்பு பதிவேட்டில் பதிவாளரால் குழந்தையின் பெயரை பதிவு செய்து தரப்படும்.

முறைமன்ற நடுவர் அவர்கள் மனுதாரரின் புகாரினையும் மனுதாரருக்கு பேரூராட்சியில் வழங்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்க்கான 05.01.2016ந் தேதிய தகவல் பதிவினையும் இந்த அறிக்கையினையும் கனிவுடன் பரிசீலித்து உண்மைக்கு புறம்பான புகார் மனுவினை தள்ளுபடி செய்திட பணிவுடன் கேட்டுக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய மனுதாரர் முறையீடு புகார் மனு மற்றும் அம்மனு மீது பெறப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைக்குப் பின் மனுதாரர் நேரில் விசாரிக்கப்பட்டார்.

05.04.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற மனுதாரர் விசாரணையின் போது அளித்துள்ள வாக்குமூலத்தில் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதையே தெரிவித்து உரிய சான்றிதழ் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

1. பிறப்பு இறப்பு பதிவு சான்று வழங்குவது குறித்து பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் மற்றும் வழிகாட்டு நெறி முறைகளில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969 –ன் படி பிரிவு 14ல் பெற்றோர் அல்லது பாதுகாவலர் மட்டுமே காலவரையறைக்குள் தனது குழந்தையின் பெயரை பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டள்ளது. பிரிவு 14 பின்வருமாறு

**Registration of Name of child:-**

Where the birth of any child has been registered without a name, the parent or guardian of such child shall within the prescribed period give information regarding the name of the child to the Registrar either orally or in writing and thereupon the Registrar shall enter such name in the register and initial and date of the entry.

<u>பிரிவு 21 பின்வருமாறு</u>

**Power of Registrar to obtain information regarding birth and death:-**The Registrar may either orally or in writing require any person to furnish any information within his knowledge in connection with a birth or death in the locality within which such person resides and that person shall be bound to comply with such requisition.

2. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை சென்னை, அவரது கடிதம் எண். 8345/VS/2000 நாள்.12.02.2000–ன் படி பெயர் பதிய காலவரம்பு 15 ஆண்டுகள் என வகுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக அக்கடிதத்தில் உறுதிமொழி படிவம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Name Declaration (in Tamil or English)**

I declare that my Male/Female child born on ----------- at ------------- has been named as ------------ and the same is final.

3. இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை சென்னை – 600 006 அவர்களின் கடிதம் எண்.145802/SBHI-1/SI/08 நாள்.17.06.2008–ல் குழந்தையின் பெயர் பதிவு செய்ய கீழ்காணும் வழிகாட்டு நெறிமுறைகளை செயல்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

R.No.19458/A9/2007 Dated:17.09.2008

Sir,

Sub: Public Health – Correction of Birth and Death Registration –Reg.
Ref: R.No145802/SBHI-1/SI/08, dt.17.06.08 of the DPH & PM

---------

In the referene cited,. the Chief Registrar of Birth and Death, Chennai has informed that certain corrections may be carried out by the Birth and Death Registrations.

- Spelling mistakes in the name of the Child and Parents name may be corrected based on school records.
- Permanent address and Temporary address may be corrected based on revenue records.
- Date of Birth cannot be changed.
- Sex of the child may be changed based on the Hospital records.
- Entire Name of the baby cannot be changed. This may be done through Gazettee notification.
- Age in the Death certificate may be corrected based on school and revenue records.

முறையீடு மனுதாரருக்கு 27.07.2015 நாளிட்ட கடிதத்தில் பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 18/1969 பிரிவு 14,15–ல் பெயர் திருத்தம், பெயர் பதிவுக்கு ஆள் அறியும் சான்றிதழ் உரிய வட்டாட்சியரிடம் பெற்று தகுந்த ஆதார ஆவணங்களுடன் உரிய விண்ணப்பம் முறையாக பிறப்பு இறப்பு பதிவு அலுவலருக்கு சம்மந்தப்பட்ட நபர் நேரில் விண்ணப்பிக்க தெரிவிக்கப்பட்டதன் பேரில் முறையீட்டு மனுதாரர் தனது 11.09.2015 நாளிட்ட கடிதத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் 23 கேள்விகளுக்கான பதில்கள் / ஆவணங்களை வழங்குமாறு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரை கேட்டுக் கொண்டுள்ளதற்கு செயல் அலுவலர் பின்வருமாறு பதில் அளித்துள்ளார்.

| வ.எண் | கேள்வி | பதில் |
|---|---|---|
| 1 | மேற்படி ஆத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் பெயர் திருத்தம் மற்றும் பதிவிற்கு ஆள் அறியும் சான்றிதழ் உரிய வட்டாட்சியரிடம் பெற்று அனுப்ப கேட்டுக் கொள்ளப்பட்டது. பெயர் பதிவு மற்றும் பெயர் திருத்தம் செய்ய ஆள் அறியும் சான்றிதழ் பெற எந்த சட்டத்தில் எந்த பிரிவில் அல்லது எந்த அரசாணை அல்லது விதியில் கூறப்பட்டுள்ளது ? அவ்வாறு ஏதேனும் சட்டப்பிரிவில், விதியில், அரசாணையில் குறிப்பிட்டிருந்தால் அதன் நகல் வழங்க வேண்டுகிறேன். | குழந்தையின் பிறப்பு சான்றில் குழந்தையின் பெயரை பதிவு செய்ய மற்றும் திருத்தம் செய்ய தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் விதிகள் 2000 பிரிவு 14 மற்றும் 15ன் படி பெற்றோர் மட்டுமே அல்லது பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு மட்டும் பாதுகாவலர் பதிவாளர் கோரும் ஆவணங்களை சமர்ப்பிக்க அறிவுறுத்தப் பட்டுள்ளது |
| 2 | XX | XX |

| | | |
|---|---|---|
| 3 | XX | XX |
| 4 | மேற்படி செயல் அலுவலரின் கடிதத்தில் தகுந்த ஆதார ஆவணங்களுடன் உரிய விண்ணப்பம் முறையாக பிறப்பு இறப்பு பதிவு அலுவலருக்கு சம்பந்தப்பட்ட நபர் நேரில் விண்ணப்பிக்க தெரிவிக்கப் பட்டிருந்தது.<br>மேற்படி எனது 20.06.2015 தேதியிட்ட விண்ணபத்தில் பெயர் பதிவு செய்ய திருத்த எனது மகன்களின் முந்தைய பெயரில்லா பிறப்பு சான்று நகல் மற்றும் சரியற்ற பெயரில் இருந்த பிறப்பு சான்று நகல்களுடன் எனது மகன்களின் பெயர் / சரியான பெயர் கொண்ட சாதி சான்றிதழ்களின் அட்டையில் நகல் இணைத்து அனுப்பட்டிருந்த நிலையில் வேறு என்ன தகுந்த ஆதார ஆவணம் (ஆவணத்தின் பெயர்) அனுப்ப வேண்டும். | ஒருமுறை பதிவு செய்த குழந்தை-யின் பெயரை எக்காரணம்கொண்டும் பிறப்பு இறப்பு பதிவாளரால் திருத்த இயலாது.வேண்டுமானால் பெற்றோர் அரசிதழில் வெளியிடலாம் என தகவல் அளிக்கப்பட்டுள்ளது. |
| 5 | XX | XX |
| 6 | XX | XX |
| 7 | XX | XX |
| 8 | பெயர் பதிவு / திருத்தத்திற்கு முறையான விண்ணப்பம் ஏதும் அரசால் வழங்கப்பட்டுள்ளதா ? ஆம் எனில் பெயர் பதிவு மற்றும் திருத்தத்திற்குரிய விண்ணப்பம் வழங்க வேண்டுகிறேன். | பெயர் பதிவிற்கு விண்ணப்பம் உறுதி மொழி படிவம் இணைக்கப்படுகிறது. பெயர் திருத்தத்திற்கான விண்ணப்பம் சென்னை அரசு அச்சகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என தகவல் அளிக்கப்படுகிறது. |
| 9 | XX | XX |
| 10 | எனது இளைய மகன் அம்ரித்குமார் சிங் பெயரை இதுவரை பெற்றோரான நானோ எனது மனைவியோ பதிவு செய்யாத நிலையில் யாரிடம் என் மகன் பெயர் பதிவு செய்ய 2000ம் ஆண்டு விண்ணப்பம் பெறப்பட்டது ? மேற்படி விண்ணபத்தின் நகல் வழங்க கேட்டுக் கொள்கிறேன் | 2000 ஆம் ஆண்டு விண்ணப்பம் 15 ஆண்டுகள் கடந்த நிலையில் பேரூராட்சி பதிவு வைப்பறையில் இருப்பு இல்லை. |

மனுதாரர் தனது மகன்களுக்கு பிறப்பு சான்றிதழ் கேட்டு நிலுவையில் இருந்த காலத்தில் திருமதி.நம்பிநாச்சி (க/பெ.லட்சுமணன்) என்பவரது மகன் முத்துக்குமார் என்பவருக்கு பெயர் பதிவு சான்று (1998 ல் பிறந்தவருக்கு) வழங்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் பெயர் பதிவு சான்றிதழ் கோரி விண்ணப்பித்த பின்னர், ஆத்தூர் செயல் அலுவலர் 11 நபர்களுக்கு ஆளறியும் சான்றிதழ் இல்லாமல் பெயர் பதிவு சான்றிதழ் வழங்கியுள்ளதாக முறையீட்டில் குறிப்பிட்டுள்ளார்.

மேலே குறிப்பிட்டவாறு அனைத்து ஆவணங்கள், சாட்சியங்கள், வாக்குமூலங்கள்அனைத்தும் மிக கவனமுடன் பரிசீலித்து கீழ்கண்டவாறு இம்முறைமன்றம் ஆணையிடுகின்றது.

பிறப்பு இறப்பு பதிவுச்சட்டம் 18/1969 பிரிவு 14,15ல் பெயர் திருத்தம், பெயர் பதிவுக்கு ஆளறியும் சான்றிதழ் நிர்பந்திக்கப்படவில்லை. எனவே முறையீடு மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டள்ள மனுதாரரின் மூத்த மகனின் பெயர் இல்லா பிறப்பு சான்று மற்றும் இளைய மகனின் சரியற்ற பெயரில் உள்ள பிறப்பு சான்று ஆகியவற்றிற்கு முறையீடு மனுதாரின் மகன்களின் பெயர் பதிவு மற்றும் திருத்தம் செய்யக் கோரிய விண்ணபத்தினை ஆளறியும் சான்றினை நிர்பந்திக்காமல் விதிகளின் படி முறையீட்டு மனுதாரரின் மனுவினை பரிசீலித்து பெயர் பதிவு மற்றும் பெயர் திருத்தச் சான்று வழங்க செயல் அலுவலருக்கு இம்முறை மன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது. நடந்த நிகழ்வுகள், இடையில் கடந்து விட்ட தாமதங்கள் அனைத்தும் பரிசீலிக்கும் போது திரு.சுப்பிரமணி போன்ற பணியாளர்கள் சந்தர்ப்பங்களை தவறு செய்திட பயன்படுத்தும் நிலையில் செயல்பட்டு உள்ளனர் என்ற ஐயம் எழும் வகையில்

அவரது நடவடிக்கை அமைந்துள்ளது. எனவே, செயல் அலுவலர் இது போன்ற பணியாளர்களை எச்சரிக்கை செய்ய வேண்டும். அலுவலக மாண்பை காத்திடவும் முயற்சிக்க வேண்டும் எனவும் இம்முறை மன்ற நடுவம் கருதுகின்றது.

2016 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 15 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்:

1. திரு.செ சந்திரசேகர்,
2/40 A, சேரன் நகர், சின்ன தொட்டி பாளையம்,
பெள்ளாதி கிராமம்,
காரமடை, மேட்டுப்பாளையம் தாலுகா,
கோயம்புத்தூர் மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
தேர்வு நிலை பேரூராட்சி,
ஆத்தூர் – 628151.